**கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் - 2020**

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும்இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 திசெம்பர் 18 ஆம் திகதிய 2557 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 5 இன் 26 ஆம் பிரிவு மற்றும் 2558 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 5 இன் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னர் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தற்போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. முன்னேற்றப்பட்ட கடற்கரையோர மற்றும் நாடளாவிய நீர்த் தரத்தின் விளைவாக தூய்மை மற்றும் சுகாதார நிலைமையை முன்னேற்றுவதனூடாக கொழும்பு பெரும்பாகத்திலுள்ள 1.5 மில்லியன் நகர மற்றும் புறநகர் குடியிருப்பாளர்களிற்கான நகர அபிவிருத்தி மற்றும் பொதுச் சுகாதாரத்தை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. (அ) கழிவு நீர் அடிப்படை வசதிகளை தரமுயர்த்தல். (ஆ) சொத்துக்கள் காமைத்துவத்தின் நிர்வாக மற்றும் செயற்பாட்டு இயலுமையை உறுதிப்படுத்தல், நிதி முகாமைத்துவம், செயற்பாட்டு செயற்திறனை கண்காணித்தல், சுற்றாடல் ஒழுங்குமுறைமை இணக்கப்பாடு, நுகர்வு சேவை மற்றும் முறையான சுத்தப்படுத்தல் சேவைகள். (இ) செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் நிர்வாக ஆதரவு. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 12,597.11 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110.24 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 10,783.65 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 94.37 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு ஆசியஅபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. மிகுதித் தொகையான ரூபா 1,813.46 மில்லியனிற்கு சமனான ஐ.அமெரிக்க டொலர் 15.87 இலங்கை அரசாங்கத்தினால் நிதியப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஏப்ரல் 09 ஆந் திகதியில் ஆரம்பித்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் காலப்பகுதியானது 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது

செயற்திட்ட நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய் வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 10 ஆம் பிரிவின் கீழ் நடுவர் குழு அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட கட்டணங்கள் சொத்தாக அடையாளங் காண முடியாத போதிலும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் இவை சொத்துக்களாக குறிப்பிடப்பட்டிருந்தது. | 11,760,537 | ஒப்பந்தத்தின் செயற்பாடு ஒப்பந்தச் செலவின் ஒரு பகுதியாக நிர்ணயிக்கப் படும் போது செலவுகள் சர்ச்சை வாரியம் மற்றும் நடுவர் செலவுகள் எழுகின்றன. | கட்டணங்கள் சொத்தாக அடையாளங் காண முடியாததுடன் அவை நிதி நிலைமைக் கூற்றில் தனியான ஒரு விடயமாக குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 637,006,943 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் இவை ரூபா 15,422,266 ஆக காட்டப்பட்டிருந்தது. இதனால் ஏற்பட்ட ரூபா 621,584,677 ஆன காரணத்தை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தியிருக்க வில்லை. | 621,584,677 | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் கட்டுப்பாட்டில் இருந்த அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மாத்திரமே நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. செயற்திட்ட நிதியத்தின் ஊடாக மாநகர சபையின் பாவனைக்கு வழங்கப்பட்ட ஏனைய இயந்திரம் மற்றும் உபகரணங்கள் கொழும்பு மாநகர சபையின் (CMC) வடிகால் பிரிவின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது. அனைத்துச் சொத்துக்களினதும் முழுப் பெறுமதி உள்ளடங்கிய சொத்துக்கள் பதிவேட்டின் ஒரு பிரதி கணக்காய்விற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் ரூபா 621,584,677 வுக்கான வருடாந்த மெய்மையாய்வு அறிக்கைகள் துரிதமாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகளுக்கு இணங்காமை

| இல | சட்டங்கள் விதிகளுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 05 ஆந் திகதிய | வழிகாட்டல் குழு குறைந்தது இரு | 2020 மார்ச் மாதத்திலிருந்து காணப்பட்ட அசாதாரண | மாற்று வழியாக நிகழ்நிலை |

| | | | | |
|---|---|---|---|---|
| | 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபத்தின் 9.3 ஆம் பிரிவு | மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட்டப்பட வேண்டும். இருப்பினும், 2020 ஆம் ஆண்டிற்குள் இரண்டு வழிகாட்டல் குழு கூட்டங்கள் மாத்திரம் இடம் பெற்றுள்ளது. | சூழ்நிலை காரணமாக கூட்டங்களை ஒழுங்குபடுத்துவது, கொவிடை தடுப்பதற்கான சுகாதார வழிகாட்டல்களை மீறுவதாக அமைவதால் சாத்தியமில்லாததாக காணப்பட்டது. | கூட்டங்கள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபத்தின் 3.2.3 ஆம் பந்தி | பொது சேவைக்கு புறம்பாக உதவி பதவியணியினர்களின் ஆட்சேர்க்கப்பட்ட வர்களின் சம்பளம் பொது சேவையில் ஆட்சேர்க்கப்பட்ட இத்தகையோரின் சம்பளத் திட்டம் ஆரம்ப படி நிலைக்கு இணையாக காணப்பட வேண்டும். | இந்த சம்பளத் திட்டத்தின் அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கப்பட்டதுடன் அதற்கிணங்கவே, கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டது. | சட்டங்கள் விதிகளுக்கு இணங்கவே சம்பளங்கள் வழங்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் | | கணக்காய்வு அவதானிப்பு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | **உற்பத்தி நிலையங்கள்** | **எதிர்பார்க்கப் பட்ட செயல் முன்னேற்றம் சதவீதம்** | **அடைந்த செயல் முன்னேற்றம் சதவீதம்** | | |
| அ) கொழும்பு மாநகர சபையின் பிரதான கழிவு நீர் முறைமை யானது மறுசீரமைத்தல் கழிவு நீர் உந்தி நிலையம் மற்றும் உந்தி பிரதானங்களை வடிவமைத்தல், கட்டுமானம் மற்றும் மறுசீரமைப்பு | வனாத்தமுல்லை | 100 | 96 | செயற்திட்டமானது 9 ஏப்ரல் 2010 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த துடன் 31 திசெம்பர் 2015 இல் அதனை முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த முகாமைத்துவம், செயற்திட்ட ஒதுக்கீடு, சாத்தியவள ஆய்வு சுற்றாடல் மதிப்பீடு, காணி கொள்வனவு, மீள்குடியேற்ற செயன் முறைகளின் பலவீனங்கள் காரணமாக 2021 திசெம்பர் 31 வரையில் | முறையான கண்காணிப்பு மற்றும் தொடர் மேற்பார்வை வழிமுறையொன்று இல்லாமை |
| | மாளிகாவத்தை | 100 | 74 | | |
| | பொரளை | 100 | 60 | | |
| | பம்பலப்பிட்டிய | 100 | 99 | | |
| | விஸ்ட்வைக் | 100 | 70 | | |
| | திம்பிரிகஸ்யாய | 100 | 73 | | |
| | கொம்பனித்தெரு | 100 | 93 | | |
| | உந்தி பிரதானிகள் | 100 | 58 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வனாத்தவில்லு விஸ்ட்வைக் | 100 | 34 | முடிவுறுத்தப்பட வேண்டிய தினங்கள் 4 தடவைகள் நீடிக்கப்பட்டது. இந்த சூழ்நிலை காரணமாக செயற்திட்டமானது மெதுவாக நகரும் செயற்திட்டமாக பதியப்பட்டுள்ளது. | |
| ஆ) வனாத்து முல்லை ஈர்ப்பு கழிவு நீர் வலை யமைப்பை மேம்படுத்தல் | வனாத்துமுல்லை ஈர்ப்பு கழிவு நீர் வலை யமைப்பை மேம்படுத்தல் | 100 | 68 | ஒப்பந்தம் 2017 யூன் 30ஆந் திகதியுடன் முறிக்கப்பட்டதுடன் அப்போதைய பௌதீக செயன்முன்னேற்றம் 68 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. தொடரும் ஈர்ப்பு கழிவு நீர் மீதி வேலைகள் ஒப்பந்ததாரருக்கு மாற்றப்பட்டுள்ளது. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயன்முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | முறையான கண்காணிப்பு மற்றும் தொடர் மேற்பார்வை வழிமுறையொன்று இல்லாமை. |

**முகாமைத்துவத்தின் கருத்துரை** — சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்றத் தரவுகளுடன் இணங்குகின்றேன்.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** — செயற்திட்ட காலம் காலவதியாவதற்கு முன்னர் செயற்திட்ட செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 3.2 பயன்படுத்தப்படாத வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2010 பெப்ரவரி 15 ஆந் திகதி முதல் 2020 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையான வழங்கப்படாத OCR கடன் மீதிக்கான அர்ப்பணிப்பு கட்டணமாக ரூபா 118,596,882 வை பொது திறைசேரியால் செலுத்தப்பட்டது. | அர்ப்பணிப்பு கட்டண கிரயம் தவிர்க்க முடியாததொன்றாகும். கடன் வழங்கப்பட்டதில் ஏற்பட்ட தாமதத்தால் மேலதிக கிரயம் ஏற்பட்டது ஏற்றுக் கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், செலுத்தப்பட்ட அர்ப்பணிப்பு கட்டணங்கள் வரம்பை வரையறைப்படுத்தவோ அல்லது செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைவதையோ பாதிக்கவில்லை. | முறையாக செயற் திட்டத்தை திட்டமிடுவதன் மூலம் இவ்வாறான கிரயங்கள் குறைக்கப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்**

| இல | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது 2010 ஏப்ரல் 09 இல் ஆரம்பிக்கப்பட்டு 2015 யூன் 30 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு நிரற்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இச்செயற்திட்டம் 2021 திசெம்பர் 31 வரை 78 மாத காலங்களால் 4 தடவைகள் நீடிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,066,143,754 தொகை ஆலோசனை சேவையாக 2020 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட்டது. ஆலோசனை சேவைகளுக்காக கடன் ஒப்பந்தத்தில் ரூபா 935,870,000 மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மேலதிக கொடுப்பனவாக ரூபா 130,273,754 தொகை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டது. | ஆலோசனை சேவைகளுக்கான கணிசமான கிரயம் ஏற்பட்டது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த தொடரும் ஒப்பந்தத்தின் பெறுகை நடைமுறைகளில் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் பலவீனமான செயலாற்றல் பிரதான காரணிகளாகும். எவ்வாறாயினும் ஆலோசனை சேவைக்காக ஒதுக்கிடப்பட்டதை விஞ்சியது சரியானதல்ல. | செயற்திட்ட காலம் காலாவதியாகு வதற்கு முன்னர் செயற் திட்டத்தின் செயற் பாடுகளை நிறைவேற்று வதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டியது அவசியமான தாகும். |
| (ஆ) | ஏழு கொள்கை ஆதரவு குழு உத்தியோகத்தர்களுக்கு 2020 ஆம் ஆண்டில் ரூபா 5,096,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் இரண்டு சந்தர்ப்பங்களில் இரண்டு கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றிருந்தது. செயற்திட்டம் 2020 திசெம்பர் 31 ஆகும் போது 66 மாதங்களைக் கடந்து முடிந்த நிலையில் கொள்கை ஆதரவு குழுவுக்கு செயற்திட்டத்தால் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 2020 திசெம்பர் 31 வரை ரூபா 38,730,786 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்டத்திற்கு கொள்கை ஆதரவு குழுவினால் வழங்கப்பட்ட பங்களிப்பை, கொள்கை ஆதரவு குழு, செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக மதிப்பிட முடியாதுள்ளது. | கொள்கை ஆதரவு குழுவிற்கு பொதுவான பணிகள் மற்றும் பல்வேறு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் செயலாற்றலை மதிப்பிடுவதை நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றது. எவ்வாறாயினும், குழுவின் அங்கத்தவர்கள் தனது நிரந்தர நிலையின் கடமைகளுக்கு மேலதிகமாக செயற்திட்டத்தின் சில செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டிருப்பதை அறியத் தருகின்றேன். | கொள்கை ஆதரவு குழு, செயற் திட்டத்தின் நோக்கங்களைஅடைவதற்காக அர்ப்பணிப்போடு பங்களிப்பு செய்யப்பட வேண்டு மென்பதுடன், அவர்களின் செயலாற்றலை மதிப்பிடப்பட வேண்டும். |

## 3.4 சுற்றாடல் தொடர்பான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தின் சுற்றாடல் உத்தியோகத்தரின் பதவி 2018 ஒக்டோபர் 22 ஆந் திகதியிலிருந்து வெற்றிடமாக காணப்பட்டது. 2020 திசெம்பர் 31 வரையிலும் இவ்வெற்றிடம் நிரப்பப்படவில்லை. | ஒரு பொருத்தமான நபரை பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு அனைத்து முயற்சிகளும் செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட போதிலும், பல்வேறு காரணங்களினால் இது வெற்றியளிக்கவில்லை. | செயற்திட்டத்தின் செயற்பாடுகள் சூழல் உணர் திறன் ஆனதால் இத்தேவைப்பாடு கட்டாயமானது. ஆதலால் சுற்றாடல் உத்தியோகத்தர் ஒருவரை தாமதமின்றி ஆட்சேர்ப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

| தொழில் நிலைகள் | பதவிகளின் எண்ணிக்கை | | | முகாமைத்துவ கருத்துரை |
|---|---|---|---|---|
| | அனுமதிக்கப் பட்டது | 2020 திசெம்பர் 31 இல் உண்மையான எண்ணிக்கை | வெற்றிடங் களின் எண்ணிக்கை | |
| செயற்திட்ட துணை பணிப்பாளர் | 01 | 0 | 01 | செயற்திட்டத்தின் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை செயற்திட்டத்தின் நாளாந்த செயற்பாடுகளை கடுமையாக பாதிக்கும் என்பது உண்மையாகும். |
| செயற்திட்ட பொறியியலாளர் (பெறுகை) | 01 | 0 | 01 | |
| கட்டுமான முகாமையாளர் | 02 | 01 | 01 | |
| செயற்திட்ட பொறியியலாளர் (சிவில்) | 05 | 03 | 02 | |
| செயற்திட்ட பொறியியலாளர் | 02 | 01 | 01 | |
| செயற்திட்ட பொறியியலாளர் | 01 | - | 01 | |
| சுற்றாடல் அதிகாரி | 01 | - | 01 | |
| செயற்திட்ட செயலாளர் | 02 | 01 | 01 | |
| செயற்திட்ட உதவி பொறியியலாளர் | 05 | 03 | 02 | |
| முகாமைத்துவ உதவியாளர் | 05 | 03 | 02 | |
| சாரதி | 02 | - | 02 | |
| **மொத்தம்** | **27** | **12** | **15** | |

**கணக்காய்வாளர் பரிந்துரை** தகுதியான பதவியணியினர் 15 க்கான வெற்றடங்களை நிரப்புவதற்கான துரித நடவடிக்கைஎடுக்கப்பட வேண்டும்.